சுற்றறிக்கை இலக்கம் : 12/97

எனது இலக்கம் : எம் 36
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 03.
1997.10.31

சகல பிரதேச செயலாளர்கள் /
மாவட்ட பதிவாளர்களுக்கும்.

## ஆவணங்களை அழித்தல்

இத் திணைக்களத்தின் திருமண, பிறப்பு மற்றும் மரண ஆவணங்கள் தங்களது அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் ஒன்று சேர்ந்துள்ள ஆவணங்களை அழித்தல் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

01. தங்களது அலுவலகத்தின் திருமண, பிறப்பு, இறப்பு பிரிவிற்கு வழக்கமாக கிடைக்கப்பெறும் திருமண, பிறப்பு, இறப்பு விண்ணப்பப் படிவங்களும், அத்தோடு பெயர் மாற்றம் செய்தல் மற்றும் ஏனைய மாற்றங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படும் சத்தியக் கடதாசி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களும் காலத்திற்குக் காலம் அழிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்காக செயற்பட வேண்டிய நடைமுறையாவது,

(அ) முத்திரையிடப்பட்ட திருமண, பிறப்பு, இறப்பு விண்ணப்பப் படிவங்கள் தங்களது அலுவலகத்தின் கணக்காய்வுப் பிரிவினால் அல்லது அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காத பட்சத்தில் இத் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவினூடாகவேனும் கணக்காய்வுக்கு உட்படுத்தி அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ததன் பின்னர் ஒட்டப்படும் முத்திரைகளை மீண்டும் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ள முடியாதவாறு எரித்து விடுதல் அல்லது கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்தல் வேண்டும். திருமணமொன்றை பதிவு செய்வதற்காகக் கிடைக்கப்பெறும் திருமண அறிவித்தல் மற்றும் சத்தியக் கடதாசி போன்றவற்றை கோவையிட்டு உரிய முத்திரையை இரத்துச் செய்துவிட்டு உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னர் சட்ட தேவைகளுக்குத் தேவைப்படின் முன்வைப்பதற்கு ஏற்றவகையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய கால எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

M. H. M. Shathulee
Sworn Translator

தொடர்ச்சி 02..

| ஆவணத்தின் விபரம் | அழிக்கப்பட வேண்டியது எவ்வளவு காலத்தின் பின்னர் என்பது தொடர்பாக |
|---|---|
| தேடுவதற்கு மற்றும் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்கப்படும் திருமண, பிறப்பு, இறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவங்கள் | உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் குறையாடுகளை நிவர்த்தி செய்து 06 மாதங்கள் கடந்ததன் பின்னர் |
| உடரட்ட திருமணம் மற்றும் விவாகரத்து விபரப் பட்டியல் | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| தொற்று நோய் தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| கிராம சேவகர் பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| நீதவான்களினால் வழங்கப்படும் மரண பரிசோதனை தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பிறப்பு ஆவணங்களை பரீட்சிக்கும் பதிவாளர்களின் வரவு நிகழ்ச்சி நிரல் | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| கைவிடப்பட்டவர்களின் அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| தக்க வைத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது பிரதி தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| காச நோய் மற்றும் புற்று நோயினால் இறந்தவர்கள் தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| 36(1) ஆம் பிரிவின் கீழ் திருமண அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவம். | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| தோட்டங்களில் நிகழும் பிறப்பு இறப்பு பதிவுகள் மற்றும் மதவழிபாட்டுத் தளங்களில் இடம்பெறும் திருமணங்கள் தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| செயலாளர்களின் அலுவலகங்கள் மாற்றமடைதல் தொடர்பான அறிக்கை | ஒரு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| செயலாளர்களின் விடுமுறை கோரிக்கைக் கடிதம், வைத்தியசாலை கூற்று ஆவணம் | இரண்டு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| ஆவணக் காப்பகத்தில் தூசி தட்டுதல் ஆவணம் | இரண்டு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பதிவு செய்யப்படாத பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான அறிக்கை | இரண்டு வருட காலம் கடந்ததன் பின்னர் |

M.H.M. Shathulee

தொடர்ச்சி 03..

| ஆவணத்தின் விபரம் | அழிக்கப்பட வேண்டியது எவ்வளவு காலத்தின் பின்னர் என்பது தொடர்பாக |
|---|---|
| செயலாளர்களின் செயன்முறை அறிக்கை | இரண்டு வருட காலம் கடந்ததன் பின்னர் |
| சட்ட ஆவணம் | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| உடரட்ட திருமணம் தொடர்பான மாதாந்த அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பிரகடனம் செய்யப்பட்ட நகரங்களின் திருமணம் தொடர்பான அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பதிவுசெய்யப்பட்ட உடரட்ட அரையாண்டு அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| இரண்டாவது பிரதிகளிலிருந்து இனங்காணப்பட்ட பிழைகள் தொடர்பான அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| தண்டப் பண அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பயன்படுத்தப்பட்ட முத்திரைகள் தொடர்பான அறிக்கை | மூன்று வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பதிவாளர்களின் அலுவலகங்களை பரீட்சித்தல் தொடர்பான அறிக்கை | ஐந்து வருட காலம் கடந்ததன் பின்னர் |
| பெயர் மாற்றம் செய்தல், சேர்த்தல், திருத்தங்கள் மேற்கொள்ளல் ஆகிய அடங்கிய பிரகடனப் பத்திரம் தொடர்பான கோவை | ஐந்து வருட காலம் கடந்ததன் பின்னர் |
| திருமணம் தொடர்பான அறிவித்தல் மற்றும் பிரகடனப் பத்திரங்களை உட்சேர்த்தல் | பத்து வருட காலம் கடந்ததன் பின்னர் |

02. உத்தியோகபூர்வ ஆவணங்களின் பொறுப்பு, அவற்றை பாதுகாத்தல் மற்றும் அழித்தல் தொடர்பான தாபன விதிக் கோவையின் XXVIII அத்தியாயத்தின் 9 வது பந்திக்கு தங்களின் கவனத்தை ஈப்பதோடு அழிக்கப்பட்ட ஆவணங்களின் விபரங்கள் 9:6 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிவேடொன்றில் குறித்து வைக்கப்படுதல் வேண்டும்

03. இந்த சுற்றறிக்கை கிடைத்தமை தொடர்பாக அறியத்தரவும்.

2023/01/12

M. H. MOHAMED SHATHULEE
SWORN TRANSLATOR
(ENGLISH/SINHALA/TAMIL)
No. 517/2, KALUGAMUWA,
GELIOYA 20620

M.H.M. Shathulee * Sworn Translator *

ஒப்பமிட்டது - ஜே.வீ. விபுலகுண
பதிவாளர் நாயகம்